செ.வெ.எண்: 593 நாள்: 25.08.2025

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களின் கல்வி மேம்பாட்டிற்காக போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம், ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம், பெண்கல்வி ஊக்குவிப்பு திட்டம் (வருமான வரம்பு ஏதுமின்றி), சுகாதாரமற்ற தொழில் புரிவோர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் ( சாதி மற்றும் வருமானம் வரம்பு ஏதுமின்றி) உள்ளிட்ட பல கல்வி உதவித்தொகை திட்டங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வருடந்தோறும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கு கல்வி உதவித் தொகை திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் 15.08.2025 நாளிலிருந்து இணையதளம் மூலம் வரவேற்கப்படுகின்றன.

இதல் ஏற்கனவே கல்லூரியில் சேர்கை பெற்று பயின்று வரும் புதுப்பித்தல் (Renewal ) மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை புதிதாக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. புதுப்பித்தல் மாணாக்கர்கள் கல்லூரிகளின் பயில்வதை சம்மந்தப்பட்ட கல்லூரிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2025-2026 ஆம் கல்வியாண்டில் கல்லூரியில் முதலாண்டு சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் மற்றும் 2024-2025 ஆம் கல்வியாண்டில் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க தவறிய மாணாக்கர்கள் தற்போது தாங்கள் பயிலும் கல்லூரியில் கல்வி உதவித்தொகைக்கென உள்ள நோடல் அலுவலரை (Nodel Officer) அணுகி UMIS –University Management Information System (https://umis.tn.gov.in/) என்ற இணையதளத்தில் கல்லூரி மூலம் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க விரும்பும் புதிய மாணாக்கர்கள் கீழ்காணும் ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்:-

1. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.
2. வருமானச் சான்று மற்றும் சாதி சான்று ஆகியவை இணையச் சான்றுகளாக இருத்தல் அவசியம். இணையச் சான்றுகளை பெற அருகிலுள்ள இ-சேவை மையங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.
3. மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு எண் இணைக்கப்பட்டிருக்க (Seeding ) வேண்டும். அவ்வங்கிக் கணக்கு செயல்பாட்டில் (Active) உள்ள கணக்காக இருக்க வேண்டும்.

இவ்விவரங்களை மாணாக்கர்களுக்கு தெரிவித்து ஆதிதிராவிடர் கிறித்துவ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களின் கீழ்கண்ட கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1.ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்(SC/ST)

2.மாநில அரசின் சிறப்பு போஸ்ட மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்(SCC)

3.உயர் கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டம்(அரசு/அரசு உதவிபெறும்/ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்கள்/பல்கலைகழகங்கள் மட்டும்)

4.கற்பிப்புக் கட்டணம் சலுகைத் திட்டம் (Tuition Fee Concession Scheme) அரசு/அரசு உதவி பெறும்/ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்கள் /பல்கலைகழகங்கள் மட்டும்).

5.பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் திட்டம்(Free Education upto UG) (அரசு/அரசு உதவி பெறும் /ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்கள் மட்டும்).

6.முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் திட்டம் (Free Education upto PG(Girls)) (அரசு/அரசு உதவி பெறும/ ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்கள் மட்டும்).

மேலும் கல்வி உதவித் தொகை தொடர்பான சந்தேகங்களுக்கு கட்டணமில்லா சேவை எண் 1800-599-7638 அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai